
அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 25 - இலங்கை வரலாறு



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 25 - இலங்கை வரலாறு

## புள்ளி வழங்கும் திட்டம்

- I பகுதி - 01 x 40 = 40

II பகுதி

| | | |
|---|---|---|
| கட்டாய வினாவிற்கு | = | 18 |
| ஏனைய 03 வினாக்களிற்கு 14 வீதம் | = | 42 |
| II ஆம் பகுதிக்கு மொத்தப் புள்ளி | = | 60 |

இறுதிப்புள்ளி = 40 + 60 = 100

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................ ✓ △ $\frac{4}{5}$
............................................................
............................................................

(ii) ............................................................ ✓ △ $\frac{3}{5}$
............................................................
............................................................

(iii) ............................................................ ✓ △ $\frac{3}{5}$
............................................................
............................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ඉතිහාසය I (I කොටස)
வரலாறு I (பகுதி I)
History I (Part I)

25 T I

27.08.2018 / 1300 - 1610

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**இலங்கை வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1978 வரை**

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள்:**

* இப்பகுதியில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாப்பத்திரத்திலேயே** விடை எழுதுக.
* ஒவ்வொரு வினா தொடர்பாக **ஐவைந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** சரியானது. அந்த வினாவின் சரியான விடையைத் தெரிவுசெய்து, இங்கு குறிப்பிடப்பட்ட **அறிவுறுத்தல்களுக்கமைய உமது விடையைக் குறித்துக் காட்டுக.**
* இப்பகுதிக்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்.
* **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** உமது விடைத்தாள்களை ஒப்படைக்கும் பொழுது **பகுதி I** இற்கான விடைகளை எழுதிய பின்னர், **பகுதி II** இற்கான விடைத்தாளுடன் **இணைத்து ஒப்படைக்க வேண்டும்.**

## பகுதி I

● **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் **ஒன்று** ஏதோ காரணத்தினால் ஏனையவற்றுடன் **பொருந்தாது. பொருந்தாத** அப்பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**1.** (1) ஹரிவங்ஸ (2) தீபவங்ஸ (3) போதிவங்ஸ (4) தூபவங்ஸ (5) தாதுவங்ஸ (.........)

**2.** (1) தாபிரபேன் (2) சிமுண்டு (3) செரண்டிப் (4) தம்பரட்ட (5) சிலான் (.........)

**3.** (1) நந்திமித்த (2) புஸ்ஸதேவ (3) தீகஜந்து (4) வேலுசுமண (5) கோதயிம்பர (.........)

**4.** (1) பெட்ரோ லொப்ஸ் டீ சூஸா
(2) ஜெரோனிமோ டீ அசாவிடோ
(3) கொன்ஸ்ரான்ரினோ டீ ஸா டீ நொரன்ஞா
(4) பிலிப் டீ ஒலிவீரா
(5) டிகோ டீ மெலோ டீ காஸ்ரோ (.........)

**5.** (1) டீ. எஸ். சேனாநாயக்க (2) ஒலிவர் குணதிலக்க
(3) டட்லி சேனாநாயக்க (4) ஜோன் கொத்தலாவல
(5) எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க (.........)

● **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப் பெயர்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**6.** (1) கதம்ப நதி - மல்வத்து ஓயா
(2) மகா நதி - தெதுறு ஓயா
(3) கோண நதி - கலா ஓயா
(4) வன நதி - வளவ கங்கை
(5) கப்பகந்தார நதி - மாணிக்க கங்கை (.........)

7. (1) மெகஸ்தனீஸ் - கிரேக்கன்
(2) பிறொகோப்பியஸ் - உரோமன்
(3) ஹியூன் சாங் - சீனன்
(4) மார்க்கோ போலோ - பாரசீகன்
(5) இப்ன் பட்டுட்டா - அராபியன் (.........)

8. (1) குட்டபாரிந்த - புத்ததாஸ லாபரிதேவ
(2) மகாசேனன் - மின்னேரித் தெய்வம்
(3) நிஸங்கமல்லன் - காலிங்க சக்கரவர்த்தி
(4) இரண்டாம் பராக்கிரமபாகு - கலிகால சாகித்திய சர்வஞ்ஞ பண்டித
(5) ஆறாம் பராக்கிரமபாகு - சத் பாஷா பரமேஸ்வர (.........)

9. (1) சில்வத் சமாகம - வலிவித்த சரணங்கர தேரர்
(2) சைவப்பிரகாச சபை - ஆறுமுகநாவலர்
(3) பௌத்த பிரம்மஞான சங்கம் - ஹென்றி ஸ்ரில் ஒல்கொட்
(4) இராமகிருஷ்ண மிஷன் - நடேச ஐயர்
(5) மகாபோதி சங்கம் - அனகாரிக தர்மபால (.........)

10. (1) 1815 - முடிக்குரிய நிலங்கள் பதிவுக் கட்டளைச் சட்டம்
(2) 1856 - கோவில் நிலங்கள் கட்டளைச் சட்டம்
(3) 1872 - தானிய வரிக் கட்டளைச் சட்டம்
(4) 1897 - தரிசு நிலக் கட்டளைச் சட்டம்
(5) 1935 - நில அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (.........)

● **11** தொடக்கம் **15** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் ஆகியவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கில் **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

11.

| X | Y |
|---|---|
| (i) கொடவாய கல்வெட்டு | A கிராம நிர்வாகம் பற்றிய சட்டதிட்டங்கள் |
| (ii) சித்துல்பவ்வ கல்வெட்டு | B துறைமுகம் ஒன்றின் சுங்கவரிகள் தொடர்பானது |
| (iii) கொண்டவட்டுவான் கல்வெட்டு | C சிவனொளிபாத புனித தலத்திற்கு முதலாம் விஜயபாகுவால் அளிக்கப்பட்ட நிலத்தானம் |
| (iv) அம்பகமுவ கல்வெட்டு | D கீத் என்ற நுவரகல சேனாதிபதிக்கு அளிக்கப்பட்ட நிலத்தானம் |
| (v) தெவனகல கல்வெட்டு | E நீதிமன்றத்துக்குக் கிடைத்த தண்டப்பணம் பௌத்த சங்கத்துக்கு வழங்கப்படுதல் |

(1) BEACD (2) CBDAE (3) CDAEB (4) DEACB (5) EDABC (.........)

12.

| X | Y |
|---|---|
| (i) ஹத்தொட்ட அணைக்கட்டு | A வளவ கங்கை |
| (ii) எலகர அணைக்கட்டு | B அம்பன் கங்கை |
| (iii) மினிப்பே அணைக்கட்டு | C களு கங்கை |
| (iv) தங்கத்தி அணைக்கட்டு | D மகாவலி கங்கை |
| (v) கொட்டபத்த அணைக்கட்டு | E தெதுறு ஓயா |

(1) BEACD (2) CBDAE (3) CDAEB (4) DEACB (5) EDABC (.........)

13.

| X | Y |
|---|---|
| (i) விஜயபாகு பிரிவேனா | A றைகம |
| (ii) பத்மாவதி பிரிவேனா | B முல்கிரிகல |
| (iii) ஸ்ரீ கணானந்த பிரிவேனா | C பப்பிலியான |
| (iv) சுனித்திராதேவி பிரிவேனா | D தொட்டகமுவ |
| (v) இருகல்குலதிலக பிரிவேனா | E காரகல |

(1) BEACD (2) CBDAE (3) CDAEB (4) DEACB (5) EDABC (.........)

| X | | Y |
|---|---|---|
| (i) | கண்டி இராச்சியத்தின் முதல் ஆட்சியாளர் | A பிரெட்றிக் நோர்த் |
| (ii) | முதல் ஒல்லாந்து தேசாதிபதி | B ஹென்றி மொங்க் மேசன் மூர் |
| (iii) | முதல் பிரித்தானிய தேசாதிபதி | C வில்லியம் கோபல்லாவ |
| (iv) | முதல் மகாதேசாதிபதி | D வில்லியம் ஜே. கொஸ்ரர் |
| (v) | இலங்கையின் முதலாவது ஜனாதிபதி | E சேனா சம்மத விக்கிரமபாகு |

(1) BEACD (2) CBDAE (3) CDAEB (4) DEACB (5) EDABC (.........)

15.

| X | | Y |
|---|---|---|
| (i) | தாழ்நில உற்பத்தியாளர் சங்கம் | A எஸ். ஏ. விக்கிரமசிங்க |
| (ii) | சிலாபச் சங்கம் | B விக்ரர் கொரயா |
| (iii) | இலங்கைத் தேசிய காங்கிரஸ் | C சார்ள்ஸ் டீ சொய்சா |
| (iv) | இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி | D பொன்னம்பலம் அருணாசலம் |
| (v) | அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | E ஜீ. ஜீ. பொன்னம்பலம் |

(1) BEACD (2) CBDAE (3) CDAEB (4) DEACB (5) EDABC (.........)

- **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவினதும் சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

16. பின்வருவனவற்றுள் இலங்கையின் புராதன கால, இடைக்கால தலைநகரங்களின் பெயர்களைச் சரியான கால ஒழுங்கில் காட்டும் தெரிவு யாது ?
   (1) அனுராதபுரம், பொலன்னறுவை, குருணாகலை, தம்பதெனியா, யாப்பகூவ
   (2) அனுராதபுரம், பொலன்னறுவை, தம்பதெனியா, குருணாகலை, யாப்பகூவ
   (3) அனுராதபுரம், பொலன்னறுவை, தம்பதெனியா, யாப்பகூவ, குருணாகலை
   (4) அனுராதபுரம், தம்பதெனியா, பொலன்னறுவை, யாப்பகூவ, குருணாகலை
   (5) அனுராதபுரம், யாப்பகூவ, பொலன்னறுவை, தம்பதெனியா, குருணாகலை (.........)

17. பின்வருவனவற்றுள் முதலாம் பராக்கிரமபாகுவின் வெளிநாட்டுப் படையெடுப்புக்கள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் அடங்கியுள்ள தெரிவு யாது ?
   (1) தெவனகல, ஆர்ப்பாக்கம், பல்லவராயன் பேட்டை, சங்கமு விகாரை
   (2) தெவனகல, ஆர்ப்பாக்கம், பல்லவராயன் பேட்டை, இராமேஸ்வரம்
   (3) தெவனகல, ஆர்ப்பாக்கம், இராமேஸ்வரம், விஜயநகரம்
   (4) தெவனகல, ஆர்ப்பாக்கம், சங்கமு விகாரை, இராமேஸ்வரம்
   (5) தெவனகல, ஆர்ப்பாக்கம், பல்லவராயன் பேட்டை, திருவாலங்காடு (.........)

18. பின்வருவனவற்றுள் பதினாறாம் நூற்றாண்டின் பின்னரான இலங்கை வரலாற்றை எழுதிய நூலாசிரியர்களின் பெயர்களைக் கொண்ட தெரிவு எது ?
   (1) ரிபைறோ, குவெய்ரோஸ், மற்சூக்கர், பார்ன்ஸ்
   (2) ரிபைறோ, குவெய்ரோஸ், வலன்ரையன், பால்டயஸ்
   (3) ரிபைறோ, குவெய்ரோஸ், வலன்ரையன், மெயிற்லண்ட்
   (4) ரிபைறோ, குவெய்ரோஸ், அல்மெய்டா, பால்டயஸ்
   (5) ரிபைறோ, வலன்ரைன், பால்டயஸ், ரொறிங்ரன் (.........)

19. பின்வருவனவற்றுள் போர்த்துக்கேயருக்கு எதிராக சிங்களவர்கள் மேற்கொண்ட போர்களைக் கொண்ட தெரிவு எது ?
   (1) முல்லேரியா, தந்துரே, பலன, வெல்லஸ்ச
   (2) தந்துரே, பலன, ரந்தெனிவல, வெல்லஸ்ச
   (3) முல்லேரியா, பலன, ரந்தெனிவல, கட்டுவன
   (4) பலன, ரந்தெனிவல, கன்னொறுவ, வெல்லஸ்ச
   (5) முல்லேரியா, தந்துரே, பலன, ரந்தெனிவல (.........)

**20. பின்வருவனவற்றுள் இலங்கையில் அரசியல் கட்சிகள் ஆரம்பிக்கப்பட்ட வருடங்களின் அடிப்படையில் அவை சரியான கால ஒழுங்கில் அமைந்துள்ள தெரிவு யாது ?**

(1) இலங்கை சமசமாஜக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன
(2) இலங்கை சமசமாஜக் கட்சி, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன
(3) இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை சமசமாஜக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன
(4) இலங்கை சமசமாஜக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி
(5) ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை சமசமாஜக் கட்சி, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன (.........)

● 21 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது. அப்பொருந்தாததைத்** தெரிவுசெய்து **அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**21. அநுராதபுர இராசதானியின் நிர்வாகம்**

(1) முழு நிர்வாக இயந்திரத்தின் மையமாக மன்னன் விளங்கினான்.
(2) அனைத்து அநுராதபுர மன்னர்களும் மௌரிய வம்சத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.
(3) கோட்பாட்டினடிப்படையில் நீதித்துறையின் தலைமைத் தானத்தில் மன்னன் விளங்கினான்.
(4) கோட்பாட்டளவில் மன்னனே மண்ணிற்குத் தலைவனாக விளங்கினான்.
(5) மன்னனின் வருமானத்தின் பிரதான மூலமாக நிலமே காணப்பட்டது. (.........)

**22. அபயகிரி விகாரை**

(1) அபயகிரி விகாரை வலகம்பா மன்னனால் கட்டுவிக்கப்பட்டது.
(2) பௌத்த சமயக் கல்வியின் புகழ்பெற்ற மையமாக அபயகிரி விகாரை விளங்கியது.
(3) அபயகிரி விகாரையில் தேரவாத, மகாயான நூல்கள் கற்கப்பட்டன.
(4) அபயகிரி விகாரையில் திரிபிடகம் எழுத்து வடிவம் பெற்றது.
(5) சீன யாத்திரிகரான பாகியன் துறவி அபயகிரி விகாரையில் தங்கியிருந்தார். (.........)

**23. கம்பளை இராசதானி**

(1) கம்பளையில் இருந்து ஆட்சிபுரிந்த முதல் அரசன் நான்காம் புவனேகபாகு ஆவான்.
(2) சேனாலங்காதிகார, அழகக்கோனார் ஆகிய இரண்டு பிரதான பிரபுத்துவ குடும்பங்கள் இக்காலத்தில் வாழ்ந்தனர்.
(3) கம்பளை ஆட்சிக் காலத்தில் கோகில சந்தேஸய, பரவி சந்தேஸய எனும் இலக்கியங்கள் இயற்றப்பட்டன.
(4) யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளனான ஆரியச்சக்கரவர்த்தி, கம்பளை இராசதானியை ஆக்கிரமித்தமை பற்றிய சான்றுகள் காணப்படுகின்றன.
(5) கணேஸ்வராச்சாரியாரின் படைப்பாக கடலாதெனிய விகாரை அமைந்துள்ளது. (.........)

**24. சீத்தாவாக்கை இராசதானி**

(1) 1521 விஜேபாகு கொள்ளையின் ('விஜயபா கொல்லய') பின்னர் தோற்றம் பெற்றது.
(2) மாயாதுன்னை இதன் முதல் ஆட்சியாளன்.
(3) றைகம் பண்டாரவின் மரணத்தின் பின் றைகம் சீத்தாவாக்கை இராசதானியுடன் இணைக்கப்பட்டது.
(4) 1582 இல் சீத்தாவாக்கை இராசதானியுடன் கண்டியப் பிரதேசங்கள் இணைக்கப்பட்டன.
(5) 1619 இல் சீத்தாவாக்கை இராசதானியுடன் யாழ்ப்பாண இராசதானி இணைக்கப்பட்டது. (.........)

**25. 1815 கண்டி உடன்படிக்கை**

(1) பிரித்தானிய ஆளுநரும் கண்டிப் பிரதானிகளும் ஓர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.
(2) கண்டிய சிம்மாசனத்தின் மீது நாயக்கர் வம்சத்திற்கு இருந்த உரிமை இல்லாதொழிக்கப்பட்டது.
(3) கண்டிய மாகாணங்களுக்கான ஆளுநராக ஜோர்ஜ் ரேணர் நியமிக்கப்பட்டார்.
(4) ஐந்தாம் சரத்தின் பிரகாரம் பௌத்த மதத்திற்கு பாதுகாப்பு அளிப்பது உறுதிப்படுத்தப்பட்டது.
(5) கண்டிப் பிரதானிகள் சிங்களம் அல்லது தமிழில் கையெழுத்திட்டனர். (.........)

● **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** அல்லது **பல** சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

(A) யும் (B) யும் மட்டும் சரியாயின் ............................................. **1** எனவும்
(B) யும் (C) யும் மட்டும் சரியாயின் ............................................. **2** எனவும்
(C) யும் (D) யும் மட்டும் சரியாயின் ............................................. **3** எனவும்
(A) யும் (C) யும் மட்டும் சரியாயின் ............................................. **4** எனவும்

ஒரு விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரியாயின் ... **5** எனவும் **அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரி |

**26. இலங்கையில் பௌத்த சமயம் தாபிக்கப்பட்டமை தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை?**
(A) மகிந்த தேரரின் வருகை
(B) பிக்கு-பிக்குணி சாசனமுறை தாபிக்கப்படுதல்
(C) மகாமேகவன நந்தவனத்தை வணக்கத்திற்குரிய பௌத்த சங்கத்திற்குத் தானமளித்தல்
(D) அரசி அனுலா பிக்குணியாகத் தீட்சைப்பெறுதல் (.........)

**27. யாப்பகூவ இராசதானி பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை ?**
(A) யாப்பகூவ சுப பப்பத என்னும் பெயரில் அறியப்படுகிறது.
(B) சங்க என்ற தளபதியால் யாப்பகூவவில் முதன் முறையாக நிர்வாக இருக்கை ஒன்று தாபிக்கப்பட்டது.
(C) முதலாம் புவனேகபாகுவால் எகிப்திய சுல்தானிடத்திற்கு அரச தூதுக்குழு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.
(D) யாப்பகூவ கட்டடக்கலைப் படைப்புக்களில் வலிமையான சோழ செல்வாக்குக் காணப்பட்டது.
(.........)

**28. ஆறாம் பராக்கிரமபாகுவின் சாதனைகள் தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை ?**
(A) ஆறாம் பராக்கிரமபாகு முழுத் தீவையும் ஒன்றுபடுத்தினான்.
(B) ஆறாம் பராக்கிரமபாகுவின் தலைநகரமாக ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டை விளங்கியது.
(C) ஆறாம் பராக்கிரமபாகு சீனக் கடற்படைத் தளபதியான செங் கோவைத் தோற்கடித்தான்.
(D) தெவிநுவரவில் உபுல்வன் தேவாலயத்தை ஆறாம் பராக்கிரமபாகு கட்டுவித்தான். (.........)

**29. ஆறுமுகநாவலர் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை ?**
(A) ஆறுமுகநாவலர், பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட இந்து சமய மறுமலர்ச்சியின் முன்னோடியாவார்.
(B) கென்றி ஸ்டீல் ஒல்கொட்டுடன் நெருங்கிய தொடர்பினை ஆறுமுகநாவலர் கொண்டிருந்தார்.
(C) ஆறுமுகநாவலர் சைவ வித்தியாசாலையைத் தாபித்தார்.
(D) ஆறுமுகநாவலர் மது ஒழிப்பு இயக்கத்தின் தீவிர அங்கத்தவர் ஆவார். (.........)

**30. டீ. பி. ஜெயதிலக பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை ?**
(A) நாலந்தா கல்லூரியின் அதிபராக டீ. பி. ஜெயதிலக விளங்கினார்.
(B) டீ. பி. ஜெயதிலக மது ஒழிப்பு இயக்கத்தின் ஒரு தலைவராவார்.
(C) டொனமூர் அரசியலமைப்பின் அரசாங்க சபையில் முதற் தலைவராக டீ. பி. ஜெயதிலக விளங்கினார்.
(D) ஐக்கிய தேசியக் கட்சியின் உருவாக்கத்தில் டீ. பி. ஜெயதிலக ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார்.
(.........)

● **31** தொடக்கம் **35** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**31. கந்தளாய் குளம் யாரால் கட்டப்பட்டது ?**
(1) இரண்டாம் ஜெட்டதிஸ்ஸ மன்னன் (2) இரண்டாம் உபதிஸ்ஸ மன்னன்
(3) இரண்டாம் மொகல்லான மன்னன் (4) இரண்டாம் அக்கபோதி மன்னன்
(5) இரண்டாம் சேன மன்னன் (.........)

**32. அமாவதுர என்ற நூலின் ஆசிரியர் யார் ?**
(1) குருளுகோமி (2) வித்யாசக்கரவர்த்தி (3) பராக்கிரம பண்டிதர்
(4) சாரிபுத்த தேரர் (5) மேதங்கர தேரர் (.........)

**33.** **ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினால் 1762 இல் கண்டி இராச்சியத்திற்கு இராஜதந்திர தூதுவராக அனுப்பப்பட்டவர் யார் ?**
(1) றொபேர்ட் நொக்ஸ் (2) ஜோன் பைபஸ் (3) ஹியூ போய்ட்
(4) றொபேர்ட் அன்ட்றூஸ் (5) ஜோன் டொயிலி (.........)

**34.** **வித்தியாலங்கார பிரிவேனாவின் தாபகர் யார் ?**
(1) வலானே சித்தார்த்த தேரர் (2) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்
(3) தொடந்தூவே பியரட்ண தேரர் (4) இரத்மலான தர்மாலோக தேரர்
(5) வலிவிட்டிய சோறத தேரர் (.........)

**35.** **பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி அரைப் பகுதியில் இடம்பெற்ற இஸ்லாமிய மறுமலர்ச்சியின் முக்கிய பிரமுகர் யார் ?**
(1) எம். சி. சித்திலெப்பை (2) ஒரபி பாஷா (3) வாப்பிச்சி மரிக்கார்
(4) ரி. பி. ஜயா (5) பதியுதீன் முகமத் (.........)

● **36** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பனவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதும் **முதலாம்** கூற்றை நன்கு விளக்குவதுமாகும். |

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** | |
|---|---|---|---|
| **36.** | அனுராதபுரத்தில் விஜயன் தனது தலைநகரை அமைத்தான். | மகாசேனன் அழகாபுரியில் ஆளகமண்ட குபேரனைப் போல வாழ்ந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. | (.........) |
| **37.** | காலிங்க மாகனின் படையெடுப்பு அனுராதபுர இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு வழியமைத்தது. | அலகராக் கால்வாய், மின்னேரி வாவி ஆகியவற்றைப் புனரமைத்தது போன்ற பல நீர்ப்பாசனத் திட்டங்களை முதலாம் விஜயபாகு மேற்கொண்டான். | (.........) |
| **38.** | இலங்கை வரலாற்றில் பதின்மூன்றாம் நூற்றாண்டில் ராஜரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சி ஒரு பிரதான திருப்புமுனையாக அமைந்தது. | பதின்மூன்றாம் நூற்றாண்டின் பின்னர் தம்பதெனியாவிலிருந்து தென்மேற்கிற்கு நிர்வாக மையம் இடம் மாறியதுடன் நீரியல் நாகரிகத்தின் வீழ்ச்சியும் ஆரம்பமாகியது. | (.........) |
| **39.** | தேசவழமை என்ற பெயரில் தமிழர்களின் வழக்காறுகளையும் சட்டங்களையும் ஒல்லாந்தர் தொகுத்தனர். | கண்டி இராச்சியத்தின் மீதான ஒல்லாந்தர் படையெடுப்பு 1765 இல் ஜான் ஸ்ருடரால் மேற்கொள்ளப்பட்டது. | (.........) |
| **40.** | திருமதி. பண்டாரநாயக்காவின் முதலாவது அரசாங்கத்தில் அரச உதவி நன்கொடை பெற்ற பல பாடசாலைகள் அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. | 1964 இல் சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. | (.........) |

**

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2018

| විෂය අංකය<br>பாட இலக்கம் | 25 | විෂයය<br>பாடம் | இலங்கை வரலாறு |
|---|---|---|---|

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 1 | 21. | 2 | 31. | 4 |
| 02. | 4 | 12. | 2 | 22. | 4 | 32. | 1 |
| 03. | 3 | 13. | 4 | 23. | 3 | 33. | 2 |
| 04. | 4 | 14. | 5 | 24. | 5 | 34. | 4 |
| 05. | 2 | 15. | 2 | 25. | 3 | 35. | 1 |
| 06. | 2 | 16. | 3 | 26. | 5 | 36. | 3 |
| 07. | 4 | 17. | 5 | 27. | 4 | 37. | 4 |
| 08. | 5 | 18. | 2 | 28. | 1 | 38. | 5 |
| 09. | 4 | 19. | 5 | 29. | 4 | 39. | 1 |
| 10. | 1 | 20. | 1 | 30. | 2 | 40. | 2 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

அධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ඉතිහාසය I (II කොටස)
வரலாறு I (பகுதி II)
History I (Part II)

25 T I

# இலங்கை வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1978 வரை

**அறிவுறுத்தல்கள் :**

* **முதலாம்** வினாவுக்கும் வேறு ஏதாவது **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **இலங்கையின் புறவுருவப்படம்** வழங்கப்படும்.)

## பகுதி II

1. உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப் படத்திலே கீழே தரப்பட்டுள்ள **இடங்கள் எல்லாவற்றையும் குறித்துப் பெயரிட்டு,** அவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றிச் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.
   (i) வளவை கங்கை (ii) ஊராத்தோட்டை (iii) களனிய (iv) நாச்சதூவ வாவி
   (v) குருணாகல் (vi) கொட்டியாரம் (vii) பதுளை (viii) வட மாகாணம்
   *(சரியாகக் குறித்துப் பெயரிட்ட ஒவ்வொன்றுக்கும் **01** புள்ளி; சிறுகுறிப்பு ஒவ்வொன்றுக்கும் **05** புள்ளிகள்)*

2. "மகாவம்சம் மகாவிகாரையின் புராணமாகும்."
   (i) மகாவம்சத்திற்கு எழுதப்பட்ட உரையினைப் (டீகா) பெயரிடுக. (01 புள்ளி)
   (ii) மகாவிகாரைக்கு உரித்தான பிரதான உபோசதகர, பிரதான தூபி ஆகியவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (iii) மகாவம்சத்தில் உள்ளடங்கியுள்ள மகாசேனனது ஆட்சியின் இறுதிக் காலம் வரையுள்ள அரசியல் வரலாறு தொடர்பான தகவல்கள், கல்வெட்டு ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுமாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
   (iv) மகாசேனனது ஆட்சியின் இறுதிக் காலம் வரை மகாவிகாரையின் புராணமாக மகாவம்சத்தைக் கருதுவது எந்தளவு ஏற்புடையதாகும் ? (07 புள்ளிகள்)

3. இலங்கையை ஐக்கியப்படுத்துவதற்காக துட்டகைமுனு மன்னன் முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு காவந்தீசன் மன்னன் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக. (14 புள்ளிகள்)

4. "முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலம், புராதன நீர்ப்பாசன முறைமை வரலாற்றில் அதி உச்சக் கட்டத்தைக் குறித்து நின்றது." ஆராய்க. (14 புள்ளிகள்)

5. பின்வரும் தலைப்புகளின் அடிப்படையில் தம்பதெனிய காலத்தின் முக்கியத்துவத்தைப் பரிசீலனை செய்க.
   (i) தம்பதெனிய இராசதானியின் உருவாக்கம்
   (ii) அந்நிய படையெடுப்பாளர்களைத் தோல்வியடையச் செய்தல்
   (iii) கலாசார விழிப்புணர்வு (14 புள்ளிகள்)

6. இலங்கையின் கரையோர மாகாணங்களில் போர்த்துக்கேயரின் அதிகாரம் வீழ்ச்சியுறுவதற்கு ஏதுவான காரணிகளை விமர்சனரீதியாக ஆராய்க. (14 புள்ளிகள்)

7. "பிரித்தானியர் ஆட்சியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விரிவாக்கம் இலங்கையின் பொருளாதாரத்துறையில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தியது."

(i) இலங்கையில் முதற் தடவையாகக் கோப்பித் தோட்டத்தை ஆரம்பித்த பிரித்தானியப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாளரைப் பெயரிடுக. (01 புள்ளி)

(ii) பத்தொன்பதாம் நூற்றாண்டில் பயிரிடப்பட்ட பிரதான **இரண்டு** பணப் பயிர்களின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(iii) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு உதவிய கோல்புறூக் ஆணைக்குழுவின் சீர்திருத்த முன்மொழிவுகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விரிவாக்கம் இலங்கையின் பொருளாதாரத் துறையில் ஓர் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்தியமை பற்றிப் பரிசீலனை செய்க. (07 புள்ளிகள்)

8. **பகுதி (A)** அல்லது **பகுதி (B)** இற்கு மட்டும் விடை எழுதுக.

**(A)** டொனமூர் அரசியலமைப்பின் பிரதான அம்சங்களைப் பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

**(B)** 1978 குடியரசு அரசியலமைப்புத் திட்டம் 1972 குடியரசு அரசியலமைப்புத் திட்டத்திலிருந்து எவ்வழிகளில் வேறுபடுகின்றது என்பதனைப் பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

9. மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமான குறிப்புகள் எழுதுக.

(i) சீகிரியா

(ii) நிஸ்ஸங்கமல்ல மன்னன்

(iii) ஆரியச்சக்கரவர்த்தி வம்சம்

(iv) 1818 பிரித்தானியருக்கு எதிரான போராட்டம்

(v) விவசாயக் குடியேற்றத் திட்டங்கள்

(vi) 1956 பொதுத்தேர்தல் (ஒவ்வொன்றுக்கும் 07 புள்ளிகள் வீதம்)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]


Department of Examinations, Sri Lanka

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

| | | |
|---|---|---|
| ඉතිහාසය I<br>வரலாறு I<br>History I | 25 | T |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. **1**

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..............................



# இலங்கை வரலாறு
# ஆதி காலம் முதல் கி.பி.1978 வரை

**அறிவுறுத்தல்கள் :**

- முதலாம் வினாவுக்கும் வேறு ஏதாவது மூன்று வினாக்களுக்கும் விடை தருக.
(முதலாம் வினாவுக்கு விடையளிப்பதற்கு இலங்கையின் புறவுருவப்படம் வழங்கப்படும்)

**01) உமக்கு வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புற உருவப் படத்திலே கீழே தரப்பட்டுள்ள இடங்கள் எல்லாவற்றையும் குறித்து பெயரிட்டு அவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றிச் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புக்கள் எழுதுக.** **5 × 2 + 8 = 18**

**02) "மகாவம்சம் மகா விகாரையின் புராணமாகும்"**

(i) **மகாவம்சத்திற்கு எழுதப்பட்ட உரையினைப் (டீகா) பெயரிடுக ?**
வம்சதப்பகாசினி (1 புள்ளி)

(ii) **மகா விகாரைக்குரித்தான பிரதான உபோசதகர , பிரதான தூபி ஆகியவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக ?**
லோக மகாபாய / ருவன்வெலிசாய மகாதூபி (2 புள்ளிகள்)

(iii) **மகாவம்சத்தில் உள்ளடங்கியுள்ள மகாசேனனது ஆட்சியின் இறுதிக்காலம் வரையுள்ள அரசியல் வரலாறு தொடர்பான தகவல்கள், கல்வெட்டு ஆதாரங்களின் மூலம் உறுதிப்படுத்தப் படுமாற்றைச் சுருக்கமாக குறிப்பிடுக.**

- இந்நாட்டில் வரலாற்றுத் தகவல்களைப் பதியும் முறை தோன்றிய தேவநம்பியதீசன் காலம் முதல் மகாசேன மன்னன் வரையான காலப்பகுதியில் இந்நாட்டில் ஆட்சி செய்த அரசர்கள் , அவர்களின் உறவு முறை , ஆட்சிக்காலம் போன்றவை பற்றிப் பல கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
உதாரணமாக - பாலு மெகிச்சாவ, குஸலானகந்த, தோணிகல, திம்பிரிவெவ

- அரசியலுடன் தொடர்புடைய அதிகாரிகள் பலர் பற்றிய தகவல்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றமை.

- கல்வெட்டுக்கள் கிடைக்கப்பெற்ற பகுதிகளைக் கொண்டு அரசர்களின் அதிகார எல்லைகளை அறிய முடிகின்றமை.
(உதாரணம் - சிதுல்பவ்வ , அனுராதபுரம்)
( இவ்வாறு மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் அரசியல் பற்றிய தகவல்கள் கல்வெட்டுக்கள் மூலம் நிரூபிக்கப்படும் வகையில் விடையளித்தல் வேண்டும்.) (04 புள்ளிகள்)

**(iv) மகாசேனனது ஆட்சியின் இறுதிக்காலம் வரை மகாவிகாரையின் புராணமாக மகாவம்சத்தைக் கருதுவது எந்தளவு ஏற்புடையதாகும்?**

- மகாவிகாரையைச் சேர்ந்த மகாநாம தேரரே மகாவம்சத்தை எழுதியவர். மகாசேன மன்னனால் மகாவிகாரை அழிக்கப்பட்டு, பின்னர் அது புனரமைக்கப்பட்ட காலப்பகுதியிலே இந்நூல் எழுதப்பட்டது. மகாவிகாரைக்கு எதிராகச் செயற்பட்ட அபயகிரி விகாரை உள்நாட்டு, வெளிநாட்டுச் செல்வாக்கைப் பெற்றிருந்ததால், மகாவிகாரையின் பண்டைய சிறப்பு நிலை மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை.

- பௌத்த சமயத்தின் தோற்றம், மகாவிகாரை அதனுடன் தொடர்பான ஏனைய கட்டிடங்கள், பற்றி மகாவம்சத்தில் அதிகம் குறிப்பிடப்பட்டுள்ளமை.

- இலங்கையின் சமய வரலாறு மகாவிகாரையுடன் தொடர்புபடுத்தி மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை.

- இவ்வாறான தகவல்களை அவதானிக்குமிடத்து மகாவம்சத்தை மகாவிகாரையின் காவியமாக குறிப்பிட முடிந்தாலும், இதற்குப் புறம்பாக, நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசாரம் போன்ற வரலாற்றுடன் தொடர்புபட்ட பல்வேறு விடயங்களையும் இந்நூல் விபரிக்கின்றது.

- இவ்வாறான தகவல்கள் கல்வெட்டுக்கள் மற்றும் ஏனைய மூலாதாரங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன. எனவே குறைகள் பலவற்றை கொண்டிருந்தாலும், மகாவம்சமானது, மகாவிகாரையின் புராணமாக அன்றிக் குறித்த காலப்பகுதியின் நாட்டின் வரலாற்றைக் குறிப்பிடும் நூலாகக் கருதமுடியும்.
( இங்கு விடையளிக்கும்போது இறுதி முடிவாக இவற்றுக்கு சாதகமாகவும், எதிராகவும் கருத்து வெளியிட முடியும், எனினும் அம்முடிவுக்கு பொருத்தமான மூலாதாரங்கள் கொண்டு அவை நிரூபிக்கப்படல் வேண்டும்.)

(07 புள்ளிகள்)

**03) இலங்கையை ஐக்கியப்படுத்துவதற்காகத் துட்டகைமுனு மன்னன் முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு காவந்தீச மன்னன் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக ?**

### உரோகணத்தை ஐக்கியப்படுத்தல்

- காவந்திஸ்ஸ மற்றும் துட்டகாமினி அரசர்கள் பற்றிய பல்வேறு தகவல்களை மகாவம்சம் குறிப்பிடுகிறது. துட்டகைமுனு மன்னன் இலங்கையை ஐக்கியப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு காவந்திஸ்ஸ அரசனின் பங்களிப்புப் பற்றி அறிந்து கொள்ள ஏனைய இலக்கிய மூலாதாரங்களின் தகவல்களும் முக்கியமானதாகும்.

- ஐக்கிய இலங்கையைக் கட்டிஎழுப்பும் பொருட்டு துட்டகாமினி மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு காவந்திஸ்ஸ பாரிய பங்களிப்பைச் செய்துள்ளான்.
  - விவாக உறவுகள் மூலம் தென்பகுதி அரசுகளுடன் தொடர்பை பலப்படுத்தியமை ( உதாரணம் - களனி , கிரிநுவர)
  - சமய தொடர்புகள் மூலம் கிழக்குப் பகுதியின், சேரு, லோன, மற்றும் சோம பகுதிகளை ஒன்றிணைத்தமை.
  - பௌத்த பிக்குகளின் உபதேசங்களைக் கேட்டு நடக்குமாறு தனது பிள்ளைகளுக்கு அறிவுறுத்தியமை.

- கிழக்கு , தென் பகுதிகளில் சமய ஸ்தலங்களை அபிவிருத்திசெய்து பிக்குமாரினதும் மக்களதும் ஆதரவைப் பெற்றமை.
- எல்லாளனிடமிருந்து இடம்பெறக்கூடிய தாக்குதல்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டமை.

- பத்து மாமல்லர்களைக் கொண்ட பலமான இராணுவப் படையொன்றை உருவாக்கியமை.

- ஆயுத உற்பத்தியும் , களஞ்சியப்படுத்தலும்

- துட்டகாமினி , சத்தாதீச இளவரசர்களிடையே மோதல்கள் ஏற்பட்டால் இராணுவத்தினர் நடுநிலையில் நின்று செயற்படுமாறு வாக்குறுதி வேண்டியமை.

- திகாபயனை கச்சதீர்த்த காவலரணைப் பாதுகாக்க நியமித்தமை.

- துட்டகாமினியின் போராடும் தீவிரமான மனநிலையை உபதேசங்கள் கொண்டு சமநிலைப்படுத்தியமை.
  - சத்தாதீசனை தீகவாவிப் பகுதிக்கு அனுப்பி அப்பகுதியில் விவசாயத்தை மேற்கொண்டமை.

(14 புள்ளிகள்)

**04) "முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலம் புராதன நீர்ப்பாசன முறைமை வரலாற்றில் அதி உச்ச கட்டத்தை குறித்து நின்றது" ஆராய்க ?**

- ஆரியர் குடியமர்வுடன் நீர்ப்பாசன நடவடிக்கைகள் ஆரம்பமாகின.
- மக்களின் பிரதான வாழ்வாதாரமாக விவசாயம் காணப்பட்டமை, மற்றும் மழை நீர் மாத்திரம் போதியதாகக் காணப்படாமை.
- கிராமியக்குளம் அனுராத என்ற அமைச்சரால் நிர்மாணிக்கப்பட்டதுடன் பெரிய குளங்களை வசப அரசன் நிர்மாணித்தமை.
- நீர்பாசனத்துறைக்கு , மகாசேனன் , தாதுசேனன் , முதலாம் அக்போ , இரண்டாம் முகலன் , இரண்டாம் அக்போ போன்ற அரசர்கள் அதிகம் பங்களிப்புச் செய்தமை.
- பொலன்னறுவைக் காலத்தில் நீர்பாசனத்துறை வளர்ச்சியடைந்து பாரிய சமுத்திரங்களும் , தடாகங்களும் நிர்மாணிக்கப்பட்டமை. (முதலாம் பராக்கிரமபாகு)
- பராக்கிரமபாகுவின் காலம் பண்டைய இலங்கையின் நீர்பாசனத்துறை வளர்ச்சியின் உச்சக் கட்டமாகும். (வானிலிருந்து விழும் ஒரு துளி நீரையேனும் மனிதனின் பயன்பாட்டிற்குப்படுத்தாது வீணே கடலில் கலக்க விட மாட்டேன்)
- முதலாம் பராக்கிரமபாகுவின் நீர்பாசனத்துறை பணிகளை இரண்டு கட்டங்களில் நோக்கலாம்.

1. தக்கிண தேச நிர்வாகியாக இருந்த வேளையில் தெதுறு ஓயாவை மறித்து அணை எழுப்பி மேற்கொண்ட நீர்ப்பாசன நடவடிக்கை. (கொட்டபத்த , சூகர நிஜ்ஜர , தோர தன்திக்க)

- ஜின் கங்கை, களுகங்கை நதிகளுக்கிடைப்பட்ட பஞ்சயோஜன ரட்டை பகுதியை வளமாக்கியமை.
- பண்டாரவாவியை வளமாக்கியமை.
- தக்கிண தேசத்தில் 53 குளங்களை நிர்மாணித்தமை.

2. முழு நாட்டையும் ஆட்சி செய்தபோது மேற்கொண்ட நீர்ப்பாசனப் பணிகள்.

- சிறிய குளங்களை ஒன்றிணைத்துப் பாரிய சமுத்திரத்தை உருவாக்கியமை.
- அங்கமடில்ல , ஹத்தொட்ட , காலிங்க , கோமதி போன்ற கால்வாய்களைப் (600 KM)புனரமைத்தமை.
- குளங்களைப் புனரமைத்தமை – மின்னேரி , கவுடுல்ல , கிரிதலை , கந்தளாய் குளங்கள்.
- வம்சக்கதைகளின்படி இவன் பாரிய குளங்கள் 163 , சிறிய குளங்கள் 2376, கால்வாய்கள் 165, கலிங்கல் தொட்டி 341 ஐ நிர்மாணித்ததாகவும், சேதமாகி இருந்த 1753 கால்வாய்களைப் புனரமைத்ததாகவும் குறிப்பிடப்படுகின்றன.

( இவ்வாறான உதாரணங்களைச் சுட்டிக்காட்டி பண்டைய நீர்ப்பாசனத்துறை வரலாற்றில் உச்சக் காலகட்டமாக முதலாம் பராக்கிரமபாகுவின் காலம் இருந்தது எனக் குறிப்பிடல் வேண்டும்)

(14 புள்ளிகள்)

**05) பின்வரும் தலைப்புகளின் அடிப்படையில் தம்பதெனிய காலத்தின் முக்கியத்துவத்தை பரிசீலனை செய்க ?**

**(i) தம்பதெனிய இராசதானியின் உருவாக்கம்.**

- தம்பதெனிய இலங்கையின் மூன்றாவது இராசதானியாகத் திகழ்வதுடன் இது இன்றைய வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- தென்மேற்கில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது இராசதானி பொலன்னறுவை இராசதானியை கலிங்க மாகன் ஆக்கிரமித்ததால் ஏற்பட்ட அச்சநிலைமையின் காரணமாகப் பொலன்னறுவைக்கு தொலைவில் உள்ள தம்பதெனியவைத் தலைநகராகத் தெரிவு செய்தமை.
- பிராந்திய ( வன்னி ) நிர்வாகியாக இருந்த மூன்றாம் விஜயபாகு அரசனால் தம்பதெனியா நிர்வாக மத்திய நிலையமாக மாற்றப்பட்டமை.
- இவனின் பின்னர் இரண்டாம் பராக்கிரமபாகு , நான்காம் விஜயபாகு, முதலாம் புவனேகபாகு போன்ற அரசர்கள் இங்கு ஆட்சி செய்தமை.
- பாதுகாப்புக்கு ஏற்ற இடமாக இருந்ததனால் உள்நாட்டு , வெளிநாட்டுத் தாக்குதல்களை கட்டுப்படுத்த முடிந்தமை.

**(ii) அந்நியப் படையெடுப்பாளர்களை தோல்வியடையச் செய்தல்.**

- கலிங்க தேசத்து மாகன் 1215 ஆம் ஆண்டு அப்போது பொலன்னறுவையின் ஆட்சியாளனான பராக்கிரம பாண்டியனைக் கொலைசெய்து பொலன்னறுவையைக் கைப்பற்றி நீண்டகாலமாக இங்கு ஆட்சி செய்ததுடன் இரண்டாம் பராக்கிரமபாகு இவனைத் தோற்கடித்தமை.
- தென்கிழக்கு ஆசியப் பகுதியிலிருந்து வந்த சந்திரபானுவை இரண்டு முறையும் தோற்கடித்தமை.
- பாண்டிய ஆக்கிரமிப்பை முறியடித்தமை.

(iii) **கலாசார விழிப்புணர்வு**

- இலங்கை வரலாற்றில் தம்பதெனியக் காலம் கலாசார வளர்ச்சி ஏற்பட்ட காலப்பகுதியாகும்.

- சமயத்துடன் இணைந்த கலாசார எழுச்சி.
  - தந்ததாதுவைப் பாதுகாத்து பூஜைகள் நடாத்தியமை ( தலதா பூஜை ), தலதா மாளிகையை நிர்மாணித்தல், தலதா பெரஹர ஊர்வலங்களை நடத்தியமை.
  - சமய மறுசீரமைப்பு, மற்றும் சட்டதிட்டங்கள் உருவாக்கப்பட்டமை ( மூன்றாம் விஜயபாகுவின் கதிகாவாத, மற்றும் இரண்டாம் பராக்கிரமபாகுவின் தம்பதெனிய கதிகாவாத)
  - அனுராதபுரம் , பொலன்னறுவை முதலிய நகரங்களையும் நாட்டின் ஏனைய பகுதிகளில் காணப்பட்ட விகாரைகளையும் புனரமைத்தமை (கம்பளை , களனி , பெலிகல , அத்தனகல்ல)
  - இரத்தினபுரி மகாசமன் தெய்வ ஆலயத்தை நிர்மாணித்தமை.
  - கடின பூஜை , உபசம்பதா சடங்குகளை நடாத்தியமை.
  - பெரஹர நடத்தியமை (எஸல பெரஹர , பௌத்த பெரஹர)

- கல்வித்துறை வளர்ச்சி
  - மூன்றாம் விஜயபாகு தனது மகனிற்கு கல்வி நடவடிக்கையினை ஆர்வத்துடன் மேற்கொண்டமை.
  - இரண்டாம் பராக்கிரமபாகு கற்ற பண்டிதனாக திகழ்ந்து நூல்களை உருவாக்கியமை (கவிசிலுமின , வனவினிச சன்னச , விசுத்தி மார்க்க சன்னய) இவன் கலிகால சாகித்ய சர்வக்ஞ பண்டித எனச் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டான்.
  - பிரிவெனாக்கள் உருவாக்கப்பட்டமை ( தம்பதெனிய விஜய சுந்தரா ராமய , குருநாகல் மகேந்திர பாகு பிரிவெனா) இவ்வாறான பிரிவெனாக்கள் கல்வி நிலையங்களாகச் செயற்பட்டன.

- இலக்கிய எழுச்சி
  - சிங்களம் , பாளி , சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் பல்வேறு இலக்கிய நூல்கள் தோன்றின.
  - கற்ற துறவிகளும் , துறவி அல்லாத பண்டிதர்களும் தோன்றிப் பல்வேறு துறைகளிலும் நூல்களை எழுதியமை.
  - பௌத்த நூல்கள் பல எழுதப்பட்டன.
  - சிங்கள மொழியில் - சிதத் சங்கராவ , சத்தர்ம ரத்னாவலிய , பூஜாவலிய, யோகர்ணவய, கவிசிலுமின பாளி மொழியில் - ஹத்தனகல்ல விகார வம்சய, சமந்த கூட வர்ணனா, பயோக சித்தி, பேசஜ்ஜ மன்சுசா , ரசவாஹினி , ஜீன சரித / சமஸ்கிருத மொழியில் - தைவவக்கு காம தேனு

(14 புள்ளிகள்)

**06) இலங்கையின் கரையோர மாகாணங்களில் போர்த்துக்கேயரின் அதிகாரம் வீழ்ச்சியுறுவதற்கு ஏதுவான காரணிகளை விமர்சன ரீதியாக ஆராய்க ?**

- 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கோட்டை இராசதானி காலத்தில் போர்த்துக்கேயரின் வருகை இடம்பெற்றது, 1521 ஆம் ஆண்டில் இந்நாட்டு அரசியலிலும் தலையிட்டதுடன், 16 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கோட்டை இராசதானிக்கு உரித்தான நாட்டின் கரையோரப் பகுதிகளில் தமது அதிகாரத்தை நிலைநாட்டினர்.

- தொடர்ந்தும் அவர்கள் கண்டியைக் கைப்பற்றும் நோக்குடன் செயற்பட்டாலும், 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆட்சிக்கு வந்த கண்டி அரசர்கள் அவர்களின் நோக்கத்தைத் தகர்த்ததுடன் 1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தரின் உதவியைப் பெற்றுப் போர்த்துக்கேயரை நாட்டிலிருந்து வெளியேற்றினர்.

- இவ்வாறு போர்த்துக்கேயரின் ஆதிக்கம் வீழ்ச்சியுற்றமைக்குப் பின்வரும் காரணிகள் ஏதுவாக அமைந்தன.
  - கண்டி ஆட்சியாளர்களின் போர்த்துக்கேயரிற்கு எதிராக மேற்கொண்ட கொள்கை
  - முதலாம் விமலதர்ம சூரிய அரசன் (தந்துரே போர், பலானப்போர்), செனரத் மன்னன் (ரன்தெனிவலப் போர்), விசேடமாக இரண்டாம் இராஜசிங்கன் (கன்னொறுவப் போர்)
  - போர்த்துக்கேயர் மேற்கொண்ட அடக்குமுறையான நிர்வாகம் ( மிசனரியின் செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தமை, சுதேசிகளின் உழைப்பைச் சுரண்டியமை, அதிக வரி, பௌத்த மத எதிர்ச் செயற்பாடுகள்) போன்ற காரணங்களால் மக்கள் போர்த்துக்கேயரை எதிர்த்தமை.
  - குடியேற்றங்களைப் பெற்றுக்கொள்வதில் போர்த்துக்கேயரிற்கும் ஒல்லாந்தரிற்குமிடையில் ஏற்பட்ட போட்டிநிலை, இதனால் போர்த்துக்கேயரை வெளியேற்ற ஒல்லாந்தரின் உதவியைக் கண்டி அரசர்கள் பெற்றுக்கொண்டமை.
  - போர்த்துக்கேயரின் கடற்படையைவிட ஒல்லாந்தரின் கடற்படை பலம்மிக்கதாக இருந்தமை.
  - ஒல்லாந்தர் தந்திரமான நடவடிக்கைகளை மேற்கொண்டமை, (1638 வெஸ்டர் வோல்ட் ஒப்பந்தம் செய்தல்.)

(14 புள்ளிகள்)

**07) "பிரித்தானியர் ஆட்சியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் விரிவாக்கம் இலங்கையின் பொருளாதாரத் துறையில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தியது"**

**(i) இலங்கையில் முதற் தடவையாக கோப்பித் தோட்டத்தை ஆரம்பித்த பிரித்தானிய பெருந்தோட்ட பயிர்ச் செய்கையாளர் யார் ?**

ஜோர்ஜ் பேர்ட் (1 புள்ளி)

**(ii) பத்தொன்பதாம் நூற்றாண்டில் பயிரிடப்பட்ட பிரதான இரண்டு பணப்பயிர்களின் பெயர்களைத் தருக ?**

கோப்பி, கொக்கோ, சிங்கோனா, தேயிலை, இறப்பர், தெங்கு (02 புள்ளிகள்)

**(iii) பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை ஆரம்பிப்பதற்கு உதவிய கோல்புறூக் ஆணைக்குழுவின் சீர்திருத்த முன்மொழிவுகளைச் சுருக்கமாக விளக்குக?**

- அரசின் ஏகபோக உரிமைகள் ஒழித்தமை.

- சிறியளவாக வீட்டுத் தோட்டங்களில் பயிரிடப்பட்டுவந்த கோப்பியை வர்த்தகப் பயிராக பாரியளவில் மேற்கொள்வதற்கு தேவையான, நிலம், உழைப்பு காணப்பட்டதனால் அத்துறையில் முதலீடு செய்வதற்கு ஆலோசனை வழங்கியமை.
  - இதுவரை காலமும் நிலத்தைக் கொள்வனவு செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டமை.
  - இராஜகாரிய முறையை நீக்கியதனால் சுதேசிகளின் உழைப்பை எதிர்பார்த்தளவு பெற முடியாவிட்டாலும் ஓரளவு பெற்றுக்கொண்டமை.
  - ஆளுநரிடம் காணப்பட்ட எல்லையற்ற அதிகாரங்கள் குறைக்கப்பட்டதனால் முதலீடு செய்வதற்கு ஏற்ற சூழ்நிலை தோன்றியமை.

- சிவில் சேவையாளர்களின் பல்வேறு கொடுப்பனவுகள் நீக்கப்பட்டதனால் அவர்கள் தனியார் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமை, இவர்கள் பெருந்தோட்டங்களில் முதலீடு செய்தமை.

- வங்கி, மற்றும் நிதி நிறுவனங்கள் தோன்றியதனால் வர்த்தகப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சிக்கு மறைமுக உந்து சக்தியாக அமைந்தது. (04 புள்ளிகள்)

**(iv) பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விரிவாக்கம் இலங்கையின் பொருளாதாரத்துறையில் ஓர் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்தியமை பற்றிப் பரிசீலனை செய்க?**

**அரசின் பொருளாதார அபிவிருத்தி**

- அரசின் வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்பட்டு, அரசு தலையிடா பொருளாதார முறை தோன்றியமை.

- பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டமை.

- பெருந்தோட்டதுறை வளர்ச்சியின் பொருட்டு சங்கங்கள் தோன்றியமை (உதாரணமாக - பெருந்தோட்ட உரிமையாளர் சங்கம்)

- உள்நாட்டு விவசாயம், வீட்டுக் கைத்தொழில்கள் பற்றிக் கவனம் செலுத்தப்படாமை.

- பணப்புழக்கம், வங்கி முறை, மற்றும் நிதி நிறுவனங்கள் தோன்றியமை.

- ஐரோப்பிய முதலீட்டாளர்கள் மற்றும் தென் இந்தியத் தொழிலாளர்களின் வருகை இடம் பெற்றமை.

- சொற்பளவிலான சுதேசிகள் பெருந்தோட்டங்களில் முதலீடு செய்பவர்களாகவும், சேவை வழங்குனர்களாகவும் செயற்பட்டமை.

- பெருந்தெரு, புகையிரத வீதிகள் உருவாக்கப் பட்டமை.

- பொருளாதாரத்தின் பிரதான அங்கமாக பெருந்தோட்டப் பயிர்கள் காணப்பட்டதுடன் அதன் உற்பத்திச் செயற்பாடு உலக பொருளாதார நிலையில் நேரடியாகத் தாக்கம் செலுத்தியது.

(07 புள்ளிகள்)

**08) பகுதி (A) இற்கு அல்லது பகுதி (B) இற்கு மட்டும் விடை எழுதுக.**

**A) டொனமூர் அரசியலமைப்பின் பிரதான அம்சங்களைப் பரிசீலனை செய்க.**

- 1924 - மனிங் - டெவன்ஷயர் அரசியல் திட்டத்தினை ஆராய்ந்து அதன் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு 1927 ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழு அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வாணைக்குழுவின் முன்மொழிவுகள் பின்னர் டொனமூர் அரசியல் திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ்வாணைக்குழுவின் விசேட அம்சங்களாகப் பின்வருவன காணப்படுகின்றன.

1. சர்வசன வாக்குரிமை

- இதுவரை சனத்தொகையில் 4% மான ஒரு சொற்பளவினரே வாக்குரிமையைப் பெற்றிருந்தனர். ஆணைக்குழுவின் இவ்வாலோசனைக்கு A.E குணசிங்க தவிர்ந்த ஏனையோர் எதிர்ப்புத் தெரிவித்தாலும், அது ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் சர்வசன வாக்குரிமையைப் பெற்ற பிரித்தானியாவின் முதலாவது குடியேற்ற நாடாக இலங்கை விளங்குகின்றது.

- இனவாரிப் பிரதிநிதித்துவமுறை நீக்கப்பட்டது.

- 21 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் வாக்குரிமை கிடைத்தது, ஆரம்பத்தில் பெண்களில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் ஆண்களில் 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் வாக்குரிமை வழங்கப் பட்டாலும் பின்னர் 21 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.

2. தேசாதிபதி

- தேசாதிபதியின் அதிகாரம் வரையறுக்கப்பட்டிருந்தமை. தான் மேற்கொள்ளும் தீர்மானங்களை குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு அறிவிக்கவேண்டி இருந்தமை.

- சட்டவாக்கக் கழக அல்லது நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எடுக்கும் திடீர் முடிவுகள் அல்லது பிழையான செயற்பாடுகளை தடுப்பது தேசாதிபதியின் பிரதான கடமையாகும்.

- தேசாதிபதியின் அதிகாரம்
  - சட்டவாக்கக்கழகத்தில் உரையாற்றுதல்.
  - சட்டவாக்கக் கழகத்தால் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு பின்வரும் நடைமுறைகளை மேற்கொண்டார்.
    - ஒரே தடவையில் ஏற்றுக்கொண்டு அனுமதித்தல்.
    - அரசனின் அனுமதி வரும் வரை அதற்கு இணங்காதிருத்தல்.
    - சீர்திருத்தங்களுடன் அல்லது சீர்திருத்தம் இன்றி சட்டவாக்க கழகத்திடம் மீண்டும் பரிசீலனை செய்யுமாறு அனுப்பி வைத்தல்.
    - முக்கியமான கொள்கைத் திட்ட விடயங்களாக இருப்பின் அதற்கு அனுமதியளித்து பின்னர் சட்ட ரீதியாக்க வேண்டிய காரணத்தால் சட்டவாக்க கழக உறுப்பினர்களில் 2/3 பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெறல்.

- இணக்கம் தெரிவித்தாலும் அதனை அமுல்படுத்துவதை ஆறு மாதங்களிற்கு பிற்போடல்.
- முழுமையாக நிராகரித்தல்.
- அவசர நிலைகளின் போது எந்தவொரு திணைக்களத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் அதிகாரம்.
- அரச சேவை ஊழியர்களை நியமித்தல், இடமாற்றம், நீக்குதல் மற்றும் அவர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்தல்.

3. சட்டவாக்கக் கழகம்

- இதுவரை காலமும் காணப்பட்ட சட்டவாக்கக் கழகம், சட்ட நிருவாக கழகங்களிற்குப் பதிலாக அரசுக் கழகம் உருவாக்கப்பட்டமை. 61 உறுப்பினர்களைக் கொண்டிருந்தமை.

- பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் 50 பேரும் சிறுபான்மையோரின் நலன் கருதி நியமன உறுப்பினர்கள் 8 நபர்களும் சட்டம், நிதி, நிர்வாகம் சார்ந்த செயலாளர்கள் மூவரும் கொண்ட 61 நபர்களைக் கொண்டிருந்தது.

- பிரித்தானியரின் பொதுமக்கள் பிரதிநிதிகள் சபையை ஒத்ததாக இச்சபை செயற்பட்டது.

- அரசுக்கழகத்தின் நிர்வாக அதிகாரத்தை நிர்வாகக் குழு முன்னெடுத்தது.

4. நிர்வாகக் குழு மற்றும் அமைச்சரவை.

- 7 நிர்வாகக் குழுக்களைக் கொண்டிருந்தமை, அவை பின்வருமாறு.
    1. உள்நாட்டு அலுவல்கள்
    2. விவசாயம்
    3. உள்ளூராட்சி
    4. சுகாதாரம்
    5. கல்வி
    6. தொழில் கைத்தொழில் வர்த்தகம்
    7. போக்குவரத்து பொது வேலைகள் தொடர்பாடல்

- ஒவ்வொரு நிருவாகக் குழுவிலும் 8 பேருக்கு மேற்படாமலும் 5 பேருக்கு குறையாமலும் நபர்கள் இருந்தனர்.

- அமைச்சரவை இவ் ஏழு நிர்வாகக் குழுக்களதும் தலைவர்களைக் கொண்டதாகவும் பிரதான காரியதரிசிகள் மூவரையும் கொண்டதாகவும் அமைக்கப்பட்டிருந்தது.

(14 புள்ளிகள்)

**B) 1978 குடியரசு அரசியலமைப்புத் திட்டம் 1972 குடியரசு அரசியலமைப்பு திட்டத்திலிருந்து எவ்வழிகளில் வேறுபடுகின்றது என்பதைப் பரிசீலனை செய்க?**

| 1972 அரசியல் திட்டம் | 1978 அரசியல் திட்டம் |
|---|---|
| - அரசியல் திட்ட நிர்ணய சபை கூடி பொதுமக்கள் கருத்துக்களைப் பெற்று தீர்மானங்களை எடுத்தல். | - பாராளுமன்ற நடைமுறைகள் மூலம் தீர்மானங்களை எடுத்தல். |
| - அரசியல் திட்ட நிர்ணய சபை, தேசிய அரசுப் பேரவை என அழைக்கப்பட்டது. | - இது மீண்டும் பாராளுமன்றம் என அழைக்கப்பட்டது. |
| - 1948 ஆம் ஆண்டிலிருந்த ஆளுநர் நாயகத்தின் பெயரளவான அதிகாரங்கள் பெயரளவான ஜனாதிபதியிடம் கையளிக்கப் பட்டது. ஜனாதிபதியை பிரித்தானிய முடி நியமிக்காது மக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட பிரதமர் நியமிப்பார். | - பெயரளவு நிர்வாகமாகவன்றி உண்மையான நிறைவேற்று அதிகாரம் கொண்ட, பொது மக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்பட ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டது. |
| - உண்மையான நிறைவேற்று அதிகாரம் மிக்கவராக அமைச்சரவையின் தலைவரான பிரதமர் செயற்பட்டார். | - இங்கு அமைச்சரவையின் தலைவர் நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதியாவார். |
| - 1948 ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வந்த சுயாதீன அரச சேவை ஆணைக்குழு மற்றும் நீதிச் சேவை ஆணைக்குழுக்கள் இரத்துச் செய்யப்பட்டு அவை அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்படல். | - மீண்டும் சுயாதீன ஆணைக்குழுக்கள் ஏற்படுத்தப் பட்டாலும் 1948 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அதிகாரத்தை விட சற்று வரையறுக்கப் பட்டதாக இருந்தது. |
| - பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறையின் கீழ் பெரும்பான்மை வாக்குகளைப் பெறும் நபர்கள் சட்டவாக்கசபைக்கு தெரிவு செய்யப்பட்டனர். | - விகிதாசார பிரதிநிதித்துவ முறையினை அறிமுகம் செய்தல். |
| - பௌத்த சமயத்தைப் பாதுகாத்து போசிக்கும் அதே வேளை, ஏனைய சமயங்களை பின்பற்றுவதற்கும் பூரண பாதுகாப்பு உத்தரவாதமளித்தல். | - அவ்வாறே இங்கும் நடைமுறைப் படுத்துவதாக குறிப்பிடல். |
| - 1956இல் கொண்டுவரப்பட்ட சிங்களத்தை அரச கரும மொழியாகக் கருதும் சட்டம் இவ்வரசியல் திட்டத்தில் உள்வாங்கப்பட்டது. | - தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை என்ற காரணத்தால் தமிழ் மொழியையும் அரச கரும மொழியாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. |
| | - ஜனாதிபதிக்குத் தேவையான ஒரு சட்டத்தை பாராளுமன்றத்தால் நிறைவேற்றிக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில், போது மக்களின் கருத்தைப் பெற்று அதனை சட்டமாக்கும் முறையிலான “மக்கள் கருத்துக் கணிப்பு” என்ற ஒரு புதிய விடயம் அறிமுகப்படுத்தப்பட்டது. |

(14 புள்ளிகள்)

(09) கீழ்வரும் தலைப்புகளில் ஏதேனும் இரண்டினைத் தெரிவு செய்து அதன் வரலாற்று முக்கியத்துவம் பற்றி சுருக்கமாக எழுதுக.

1) சீகிரியா

- ❖ கிறிஸ்துக்கு முற்பட்ட கால பிராமி குறிப்பின் படி சீகிரியா பிக்குகளின் வசிப்பிடமாக இருந்துள்ளது.
- ❖ மகாவம்சத்தின் படி கி.பி. 5 ம் நூற்றாண்டில் காசியப்ப அரசன் தனது சகோதரன் முகலனிடமிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு இதனை நிர்மானித்தான், குபேரக் கடவுள் வீற்றிருந்ததைப் போன்று இவன் இங்கு வீற்றிருந்தான்.
- ❖ இங்கு காணப்படுகின்ற நீர் அகழி, மதில், பாதுகாப்பு மாளிகை ஆகியவற்றைக் கொண்டு இது பாதுகாப்பு நிலையமாகத் திகழ்ந்துள்ளது என கருதப் படுகிறது.
- ❖ எனினும் இதற்குப் புறம்பாக நீர்த் தடாகம், நீர்ப்பூங்கா, பூங்கா என்பன நிர்மானிக்கப்பட்டு சிறந்த ஒரு பூங்காவாக இருந்துள்ளது.
- ❖ இங்கு வரையப்பட்டுள்ள சுவர் ஓவியங்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.
- ❖ புராதன காலம் முதல் சீகிரியாவைப் பார்வையிட வந்த உள்நாட்டு, வெளிநாட்டு மக்களால் எழுதப்பட்ட கிறுக்கல் கவிதைகள் கொண்ட கண்ணாடிச் சுவர் முக்கியமான நிர்மானமாகும்.
- ❖ வெளிநாட்டுத் தொடர்புகள் பற்றி இங்கு கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள் தெளிவு படுத்துகின்றன.
- ❖ காசியப்ப அரசனின் பின்னர் இராசதானியாக அன்றி பௌத்த ஆராமைகளாக மாற்றப்பட்டு தர்மரிசி பிரிவு பிக்குகளுக்கு அன்பளிப்பு செய்யப் பட்டதாக குறிப்பிடப் பட்டுள்ளது.
- ❖ பிற்பட்ட காலப்பகுதியில் இது கைவிடப்பட்டு காடாக மாறியதுடன் பின்னர் பிரித்தானியரின் காலப்பகுதியில் இது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

**(7புள்ளிகள்)**

2) நிசங்கமல்ல அரசன்

- ❖ முதலாம் பராக்கிரமபாகுவின் பின்னர் பொலன்னறுவையைஆண்ட சிறந்த மன்னனாக நிசங்கமல்லன் காணப்படுகின்றான்.
- ❖ கலிங்க வம்சத்தை சேர்ந்த நிசங்கமல்லன் பற்றிய தகவல்கள் கல்பொத்த கல்வெட்டிலும், வந்துறுப்பே குறிப்பிலும், தொரட்டியாவ குறிப்பிலும், தம்புள்ளைக் குகைக் குறிப்பு, ராஜாவலிய, மகாவம்சம் ஆகிய மூலாதாரங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.
- ❖ அதிக கல்வெட்டுக்களை நிறுவிய மன்னனாக இவன் காணப்படுகின்றான்.
- ❖ பல சவால்களிற்கு முகங்கொடுத்தான்.
    - ▪ கலிங்க தேசத்தை சேர்ந்தவனாக (வெளிநாட்டு வம்சமாக) இருந்தமை.
    - ▪ முதலாம் பராக்கிரமபாகுவின் சிறந்த ஆளுமை, சேவை, மற்றும் புகழ் என்பன இவனுக்கு ஒரு சவாலாக இருந்தமை.
    - ▪ கொவி குலத்தினரின் (விவசாய குலம்) எதிர்ப்பு.
    - ▪ படைத் தளபதிகளின் எதிர்ப்பு.
    - ▪ பாண்டிய வம்சத்தவர்களின் எதிர்ப்பு.
    - ▪ தொலைபகுதியில் வாழ்ந்த மக்களின் எதிர்ப்பு.

- ❖ அவற்றை வெற்றி கொண்ட முறை
    - ▪ கலிங்க வம்சத்தவர்களுக்கும் இந்நாட்டு அரசாட்சியில் உரிமை உண்டு என்பதை நிரூபிக்க முனைந்ததுடன், கலிங்கர்களின் புகழ், முக்கியத்துவம் பற்றி குறிப்பிட்டமை.
    - ▪ முதலாம் பராக்கிரமபாகு தனது வம்ச ஆட்சியை நிலை நாட்டும் பொருட்டு சிங்கபுரத்துக்கு தூதுச் செய்தியை அனுப்பி தன்னை வரவழைத்ததாக குறிப்பிட்டுள்ளமை.

- பராக்கிரமபாகுவிற்கு நிகராக தானும் பல பணிகளைச் செய்துள்ளதாகக் குறிப்பிட்டு பராக்கிரமபாகுவைப் போல் செயற்பட முனைந்தமை.
- பராக்கிரமபாகுவின் பணிகளைக் குறைவாகக் குறிப்பிட்டு தனது புகழை எடுத்துரைத்தமை.
- விவசாயிகள் பரம்பரையை (கொவி குல) நிந்தித்து எச்சரிக்கை விடுத்தமை.
- நாடு பூராகவும் பயணித்ததன் மூலம் தொலை தூர மக்கள் மேற்கொண்ட கிளர்சிகளை அடக்கியமை, நாட்டு மக்களின் ஆதரவைப் பெற முயன்றமை. (உதாரணம் வரிகளைக் குறைத்தமை – கெதி அட )
- பௌத்த சமயத்தைப் பேணிப் பாதுகாத்தமை.

❖ பராக்கிரமபாகுவினால் பேணப்பட்டு வந்த நிர்வாக முறையினை அதே ஒழுங்கில் பின்பற்றி 9 ஆண்டுகள் அரசியல் ஐக்கியத்தையும் உறுதிப்பாட்டையும் முன்னெடுத்தமை.

*கலாச்சாரப் பணிகள்*

❖ முரண்பட்டு பிளவடைந்த 3 பீடங்களையும் (நிகாய) இணக்கப்படுத்தி பௌத்த சாசனத்தைப் பாதுகாக்கும் படி பிக்குகளிற்கு வலியுறுத்தியமை.

❖ பல்வேறு பகுதிகளிலும் இருந்த பௌத்த விகாரைகளைப் புனரமைத்தமை.(மகாகாம, அனுராதபுரம், மெதிரிகிரிய, வெல்கம் வெஹர, தம்புள்ளை)

❖ புதிய பௌத்த நிலையங்களை அமைத்தமை.(ரன்கொத் விகாரை, வட்டதாகய, ஹெடதாகய, நிஸ்ஸங்கலதா மண்டபம், சங்காராம விகாரை)

❖ துலாபாரக் கொடையை வழங்கியமை.

**(7புள்ளிகள்)**

3) ஆரியச்சக்கரவர்த்தி பரம்பரை

❖ ஆரியச்சக்கரவர்த்திகள் பற்றிய தகவல்கள் யாழ்ப்பாண வைபவ மாலை, செகராச சேகர மாலை முதலிய மூலாதாரங்களில் குறிப்பிடப் பட்டுள்ளமை.

❖ 1344 ல் இங்கு வந்த இப்னு பதூதா ஆரியச்சக்கரவர்த்திகளை இலங்கையின் சுல்தான்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

❖ யாழ்ப்பாண இராசதானி வரலாற்றில் ஆரியச்சக்கரவர்த்திகள் பன்னிரண்டு நபர்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கின்றன.

1. சிங்கை ஆரியன் – என்ற பெயரில் அழைக்கப்பட்ட விஜய கூழங்கை முதலாவது ஆரியச்சக்கரவர்த்தி அரசனாவான். 14 ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை தலைமையகமாகக் கொண்டு, இராசதானியை உருவாக்கிய இவன், நல்லூர் கந்தசுவாமி கோயில் உட்பட பல கோயில்களை நிறுவியுள்ளான்.
2. குலசேகர சிங்கை ஆரியன் – விவசாயத்தின் மேம்பாட்டிற்கு அதிக அக்கறை காட்டினான்.
3. விக்கிரம சிங்கை ஆரியன் – சிங்கள, தமிழ் மக்களிடையே சமாதானத்தை ஏற்படுத்தினான்.
4. வரோதய சிங்கை ஆரியன் – தமிழ், சிங்கள மக்களிடையே ஒற்றுமையை/ சமாதானத்தை மேலும் வலுப்படுத்தினான்.
5. மார்த்தாண்ட சிங்கை ஆரியன் – கல்வி மற்றும் விவசாயத்தை மேம்படுத்தியதுடன் வன்னியர்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தினான்.
6. குணபூசன் சிங்கை ஆரியன் – இவனது காலத்தில் யாழ்ப்பாண இராசதானி நன்கு முன்னேற்றம் அடைந்திருந்தது.
7. வரோதய சிங்கை ஆரியன் – வன்னியர்களின் தூண்டுதலால் சிங்கள மக்கள் மேற்கொண்ட கிளர்ச்சியைக் கட்டுப்படுத்தினான்.

8. ஜயவீர சிங்கை ஆரியன் – முத்துக் குளிப்பு தொடர்பாக புவனேகபாகுவுடன் இடம்பெற்ற போரில் வெற்றி பெற்று 12 வருடங்களாக தனது ஏகாதிபத்தியத்தை நாட்டில் பரவச் செய்தான்.
9. குணவீர சிங்கை ஆரியன் – தென் பகுதிகள் சிலதைத் தாக்கி அப்பகுதிகளில் தமிழ் மக்களைக் குடியமரச் செய்தான்.
10. கனகசூரிய சிங்கை ஆரியன் – வன்னியர்களின் தூண்டுதலால் ஏற்பட்ட சிங்கள மக்களின் கிளர்ச்சியை தாக்குப்பிடிக்க முடியாது இந்தியாவுக்கு சென்றாலும், 17 வருடங்களின் பின் மீண்டும் வந்து அரசைக் கைப்பற்றினான்.
11. பரராஜ சேகரன் – இவனது காலத்தில் இலக்கிய வளர்ச்சி இடம்பெற்றது. இவனது சகோதரன் ஒருவன் யாழ்ப்பாணத்தில் கல்வி நிலையம் ஒன்றை நிறுவி தென் இந்தியாவிலிருந்து ஏராளமான தமிழ் நூல்களை எடுத்து வந்தான், புதிய நூல்களை எழுதுவித்தான், இவனது மருமகனான அரிஷ கேஷரி சம்ஸ்கிருத நூலான ரகுவம்சத்தை தமிழுக்கு மொழி பெயர்த்தான்.
12. சங்கிலியன் – 1519 ம் ஆண்டு பரராஜ சேகரனைக் கொலை செய்து அரசனானான். இக்காலப்பகுதியில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். உள்நாட்டுக் குழப்பங்களால் 1566 ம் ஆண்டு இவன் அரசாட்சியை இழந்தான்.

- மூன்றாம் விக்கிரமபாகுவின் காலத்தில் கம்பளை இராசதானியைத் தாக்கி அதன் சில பகுதிகளிலிருந்து வரி அறவிடும் அளவு இவ்வரசர்கள் பலம் பெற்றிருந்தனர்.
- ஆறாம் பராக்கிரமபாகு அரசன் சப்புமல் குமாரனை அனுப்பி ஆரியச்சக்கரவர்த்திகளைத் தோற்கடித்தான்.

**(7 புள்ளிகள்)**

4) 1818 ஆம் ஆண்டு கிளர்ச்சி

- இக்கிளர்ச்சியின் நோக்கம் பிரித்தானியரை வெளியேற்றுவதாக இருந்ததுடன் இலங்கையில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இடம்பெற்ற முதலாவது சுதந்திரப் போராட்டமாகும்.

காரணம்:-

- 1815 ம் ஆண்டு ஒப்பந்தத்தை பிரித்தானியர் மீறிச் செயற்பட்டதால் மலையகத்தில் வாழ்ந்த பிக்குகள், பிரதானிகள் மற்றும் பொது மக்களிடையே ஏற்பட்ட எதிர்ப்பு.
    - 5 ஆம் வாசகத்தில் பௌத்த சமயத்தைப் பேணிப் பாதுகாப்பதாக குறிப்பிட்டிருந்தாலும் கிறிஸ்தவ பிரித்தானியர்கள் அதனை நடைமுறைப் படுத்த தவறியமை.
    - 4 ஆம் வாசகத்தில் சுதேச நிர்வாக முறைகளை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதாக குறிப்பிட்டாலும், மலையகத்தில் இருந்த எழுதப் படாத சடங்கு சம்பிரதாயங்கள் பற்றிய அறிவோ அவற்றை மதிக்கும் மனநிலையோ பிரித்தானியரிடம் காணப்படவில்லை. (உதாரணம் – ஹஜ்ஜி மரிக்கார் மடிகே பத்த முகாந்திரம் பதவிக்கு நியமிக்கப்பட்டமை)
    - தொலை நாட்டில் உள்ள அரசன் ஒருவனை தமது அரசனாக ஏற்க வேண்டி ஏற்பட்டது. பிரதானிகளுக்கும் பிக்குகளிற்கும் சம்பிரதாய பூர்வமாக கிடைத்து வந்த மதிப்பு மரியாதைகளை பிரித்தானியர் வழங்காததனால், சாதாரண மக்களிடையே வெறுப்பு ஏற்பட்டது.
- உடனடிக் காரணமாக ஹஜ்ஜி மரிக்காரை ஊவா வெல்லஸ்ஸ பகுதிக்கு முகாந்திரமாக நியமிக்கப் பட்டதை மக்கள் எதிர்த்து கிளர்ச்சி செய்த வேளையில் நாயக்கர் வம்சத்தை சேர்ந்த துரைசாமி என்ற நபர் பௌத்த பிக்குகளின் ஆசீர்வாதத்துடன் முன்னுக்கு வந்தான். கெப்பட்டிபொல திசாவை போன்ற பிரதானிகளும் கிளர்ச்சிக் காரர்களுடன் இணைந்து கொண்டதால் இப்போராட்டம் பிரித்தானிய நிர்வாகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது.

- இக்காரணத்தினால் பிரித்தானியர் மேலதிகப் படைகளை வரவழைத்து இம்மக்கள் எழுச்சியைக் கட்டுப்படுத்தினர்.
- இப்போராட்டம் தோல்வியடைவதற்கு, ஒழுங்காகத் திட்டமிடப் படாமை, பிரதானிகளிடையே நிலவிய கருத்து மோதல், மொல்லிகொட போன்ற சில பிரதானிகள் பிரித்தானியருக்கு ஒத்துழைத்தமை போன்ற காரணங்கள் எதுவாக அமைந்தன.

விளைவுகள்

- *1815* ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் கிடைத்த சிறியளவான சுதந்திரமும் தடைப்பட்டமை.*1818* நவம்பர் *21* பிரகடனத்தை வெளியிட்டமை.
- புதிய நீதிமுறையொன்றை அறிமுகப் படுத்தினர்.
- தொடந்தும் மலையகப் பகுதி தனியான நிருவாக அலகாக நிர்வகிக்கப்பட்டு வருவதுடன் ஆணையாளர்கள் சபை ஒன்றின் மூலம் நிர்வகிக்கப்பட்டு வந்தமை.
- கெப்பட்டிபொல, மடுகல்ல போன்ற தலைவர்களுக்கு மரண தண்டனை வழங்கப் பட்டதுடன் மேலும் பலர் மொரிசியஸ் தீவுக்கு நாடு கடத்தப் பட்டனர்.
- சாதாரண பொது மக்கள் பெரும்பாலானவர்கள் இப்போராட்டத்தில் இறந்தனர்.

**(7புள்ளிகள்)**

5) விவசாயக் குடியேற்றத் திட்டம்

- திருத்தியமைக்கப்பட்ட பாரிய குளங்களில் சேருகின்ற நீரைப் பயன்படுத்தி விவசாயத்தை மேற்கொள்ள வெளிப் பகுதிகளிலிருந்து விவசாயிகளை எடுத்து வந்து குடியமர்த்துவதே விவசாய குடியேற்றத் திட்டத்தின் பிரதான அம்சமாகும்.
- இன்று செயற்பட்டு வருகின்ற விவசாயக் குடியேற்றத் திட்டத்தின் ஆரம்பம் *1933* ம் ஆண்டு முதலாவது உருவாக்கப்பட்ட மின்னேரி விவசாயக் குடியேற்றத் திட்டமாகும். *D.S* சேனாநாயக இதன் முன்னோடியாகத் திகழ்ந்தார்.
- *1933*ல் கலாவாவி (காகம) மற்றும் நாச்சதுவ குளங்களைத் தழுவி விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டன.
- இவ்விவசாயக் குடியேற்றத் திட்டம் பல்வேறு நோக்கங்களின் கீழ் மேற்கொள்ளப் பட்டது.
  - சனநெருக்கடிப் பகுதியிலிருந்து சன நெரிசல் இல்லாத பகுதிகளில் குடியமர்த்துதல்.
  - இதற்காக காணிகள் இல்லாத விவசாயிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு விவசாயத்தை மேற்கொள்ள வாய்ப்பளித்தல்.
  - நாட்டில் நெற்செய்கையை அதிகரித்து அரிசி இறக்குமதிக்காக செலவிடும் தொகையைக் குறைத்தல்.
- கலாவாவி, நாச்சதுவ வாவி திட்டங்களில் விவசாயிகளை குடியமர்த்திய போது இஸ்ரேல், லிபியா, இந்தியா முதலிய நாடுகளின் அனுபவத்தைப் பெற்றமை.
  - விவசாயிகளுக்கு வீடு கட்டுவதற்கான பண உதவியை அரசு வழங்குதல், *1939* ம் ஆண்டின் பின்னர், விவசாயிகளை குடியேற்றும் போதே அவர்களுக்கான வீடுகளும் அமைக்கப் பட்டிருந்தன.
  - ஆரம்பத்தில் வயல் காணி *5* ஏக்கரும், தோட்டக் காணி *3* ஏக்கரும் வழங்கப் பட்டன.
  - அரசாங்கத்தினால் காணிகள் விவசாயம் செய்வதற்கு ஏற்ற வகையில் செப்பனிட்டு வழங்கப் பட்டது, முதலாவது விளைச்சலைப் பெறும் வரை இம்மக்களுக்கு பிளைப்பூதியமும் வழங்கப்பட்டது.
  - இவ்வாறு வழங்கிய காணிகளை விற்க முடியாது.
  - இக்குடியேற்றங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் அரசினால் நிறைவேற்றப் பட்டன.

- ❖ மின்னேரியாவில் ஆரம்பமான இக்குடியேற்றத் திட்டம், உலர் வலயப் பகுதிகளில் பரவலடைந்தமை.
- ❖ சுதந்திரம் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில், மின்னேரி, நாச்சதுவ, கலவாவி, இரணைமடு, மினிப்பே, பெரகம, பராக்கிரம சமுத்திரம், ரிதிபெந்த அணை, எலகர முதலிய குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப் பட்டிருந்தன.
- ❖ சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அனைத்தும் புதிய குடியேற்ற திட்டங்களை முன்னெடுத்தமை. (ஹுருளு வாவி, தேவஹுவ, கல் ஓயா)

**(7 புள்ளிகள்)**

6) *1956 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்*

- ❖ *1956* ஏப்ரல் *5,7* மற்றும் *10* ஆம் திகதிகளில் பொதுத் தேர்தல் இடம் பெற்றது.
- ❖ இத்தேர்தல் நடவடிக்கையில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் பல காணப்பட்டன.
  - சிங்கள மொழியை மாத்திரம் அரச கரும மொழியாக ஏற்றுக் கொண்டமை.
  - *1947* ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையை விமர்சித்தமை, அதில் மாற்றம் ஏற்பட வேண்டும் என சுட்டிக் காட்டியமை.
  - பிக்குகளைக் கொண்டு அமைக்கப்பட்ட பௌத்த சாசன ஆணைக்குழுவில் பௌத்த சமயம் தொடர்பான அரசாங்கத்தின் பொறுப்பு பற்றி சுட்டிக் காட்டியமை.
  - சமூகத்தில் பலரும் எதிர்கொண்ட பிரச்சினைகளால் சங்கத்தார், ஆசிரியர், வைத்தியர், விவசாயி, தொழிலாளி முதலியோர் அங்கத்துவம் பெற்ற ஐம்பெரும் சக்திகள் ஒன்றிணைந்தமை.
  - இவர்கள் ஏகாதிபத்தியர்களால் வழங்கப்பட்ட அரசியல் திட்டத்திற்கு பதிலாக சுதேசிகளால் தயாரிக்கப் பட்ட புதிய அரசியல் திட்டம் ஒன்றினை வேண்டி நின்றனர்.
  - *SWRD* பண்டாரநாயகவை தலைவராகக் கொண்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் ஒன்றிணைந்தமை.
  - இடதுசாரி கட்சிகளும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒன்று பட்டு மக்கள் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் ஒரு கூட்டமைப்பாக ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிட்டனர்.
- ❖ ஐக்கிய தேசிய கட்சி எட்டு ஆசனங்களை மாத்திரம் பெற்ற அதே வேளை மக்கள் ஐக்கிய முன்னணி பாரிய வெற்றியைப் பெற்றது.
- ❖ இவ்வெற்றி இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.
  - அரசியல் அதிகாரம் ஒரு கட்சியில் இருந்து இன்னொரு கட்சிக்கு மாறியமை.
  - மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அவர்களின் செயற்பாடுகளில் ஏற்பட்ட மாற்றம்.
    - ✓ சிங்கள தேசிய வாதிகளும், மாக்சிய வாதிகளும் என பிரிந்து இருந்தவர்கள் ஒன்று பட்டமை.
    - ✓ தேசிய உடை , சிங்கள மொழியில் சபையில் உரையாற்றுதல்
  - புதிய அரசாங்கம், அமைச்சரவை அமைக்கப்பட்டமை.
  - தேர்தல் நடவடிக்கையின் போது முன்னர் இருந்த அரசாங்கத்துக்கு குற்றச் சாட்டுக்களை முன்வைத்து எதிர்க் கட்சியினர் முன்வைத்த ஆலோசனைகள் வெற்றி பெற்றமை இந்நாட்டு அரசியலில் ஏற்பட்ட முக்கியமான மாற்றமாகும்.
    - ✓ அரசாங்கத்தை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை – எல்லையற்ற அதிகாரத்தைப் பயன்படுத்தல், முதலாளித்துவத்துக்கு ஆதரவளித்தல் போன்ற கொள்கைகளை விமர்சித்தனர்.